*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 352/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW–1 (LW–1)***

*Name / Father's Name:* ***திரு.ராமகோவிந்தன் த/பெ. நாராயணசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **19.06.2025.**

துவக்க நேரம் 03.05 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கீரிப்பட்டியில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரியை தெரியும், எனது ஊர்க்காரர் ஆவார். சுப்ரமணி, அழகேசன், அன்பரசு, தங்கமுத்து ஆகியோர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள். எனது அண்ணன் மகள் அலமேலு என்பவர், தங்கமுத்துவின் பாகத்தை விலைக்கு வாங்கினார். பிறகு அந்த நிலத்தை மனோகரனுக்கு விற்றுவிட்டார். அதனால் சுவாதீனம் கொடுத்த தோட்டத்திற்கு சென்று தண்ணீர் எடுத்துவிட மோட்டரை அலமேலு ஆன் செய்தார்.

2) அப்பொழுது சுப்ரமணி, அழகேசன், அன்பரசு, தங்கமுத்து ஆகிய எதிரிகள் நான்குபேரும் அங்கு வந்து மோட்டர் போடக்கூடாது என்று சொல்லி சண்டை போட்டார்கள். அதனால் 21.05.2022 அன்று அலமேலு மல்லியகரை காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார். அந்த புகாரின் பேரில் விசாரணைக்காக நானும், அலமேலு, சாமிநாதன், மனோகரன், சண்முகசுந்தரம் மேலும் எங்களுடன் 5 நபர்களும் சுப்ரமணி, அழகேசன், அன்பரசு, தங்கமுத்து ஆகியோர்களும் மல்லியகரை காவல் நிலையத்திற்கு சென்றோம்.

3) காவல் நிலையத்தில் விசாரணை நடந்துகொண்டிருந்தபொழுதே, என்னை, அன்பரசு உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி

அடிக்க வந்தார். அப்பொழுது இரண்டு போலிசார், அன்பரசுவை காவல் நிலையத்திலிருந்து வெளியே அனுப்பிவிட்டார்கள். அன்பரசு வெளியே வந்த பிறகு என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்றும், நீ காவல் நிலையத்திலிருந்து வெளியே போகமுடியாது என்று என்னை மிரட்டினார். அதனால் அங்கிருந்த காவல் உதவி ஆய்வாளர், என்னை புகார் கொடுக்கும்படி சொன்னார். நானும் புகார் கொடுத்தேன்.

4) என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 03.14 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.06.19 16:56:27 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 352/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-4)***

*Name / Father's Name:* ***திரு.சண்முகசுந்தரம் த/பெ. ஜெயராமன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **19.06.2025.**

துவக்க நேரம் 03.15 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கீரிப்பட்டியில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி ராமகோவிந்தன் எனது உறவினர். எதிரி அன்பரசு, எனது பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 22.05.2022 அன்று மல்லியகரை காவல் நிலையத்திற்கு நான் சொந்த வேலையாக சென்றிருந்தேன். அங்கு அன்பரசு, அவரது அப்பா, சித்தப்பா மற்றும் உறவினர்களும், மேலும் ராமகோவிந்தன், சுவாமிநாதன், அண்ணாமலை மற்றும் சிலர் இருந்தார்கள்.

2) அப்பொழுது எதிரி, ராமகோவிந்தனிடம் வாக்குவாதம் செய்து, அடித்துவிடுவேன் என்று மிரட்டினார். உடனே அங்கிருந்த காவலர்கள் அன்பரசுவை வெளியே அனுப்பிவிட்டார்கள். இந்த சம்பவம் காலை 11.30 மணிக்கு நடந்தது. எங்களுக்கு வேலை முடியாமல் இருந்ததால் நான் காவல் நிலையத்திலேயே இருந்தேன். பின்பு அன்று பகல் 01.30 மணியளவில் போலிசார் சம்பவயிடத்தில் படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். அதில் நானும், அண்ணாமலை என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **(பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 03.20 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.06.19 16:56:39 +0530

Judicial Magistrate No.2, Attur.